# 32. பச்சைக் கிளியே!

## (பாடல்)

### அ) கீழ்காணும் அருஞ்சொற்களை சொல்லிக்கொண்டே எழுதுக.


1. கிளி
2. பழம்
3. சோறு
4. பச்சை
5. மஞ்சள்
6. அரசர்
7. வட்டம்
8. மகிழ்ந்து
9. வானவில்

### ஆ) பொருள் தருக.

1. கனி - பழம்
2. மன்னர் - அரசர்
3. களித்து - மகிழ்ந்து

### இ) எதிர்ச்சொல் தருக.

1. கனி x காய்
2. வா x போ
3. உண் x உண்ணாதே



### ஈ) பிரித்து எழுதுக.

1. வட்டமான - வட்டம் + ஆன
2. வந்திருக்க - வந்து + இருக்க
3. பச்சைக்கிளி - பச்சை + கிளி

**உ) ஒருமை பன்மைச் சொற்களால் நிரப்புக.**

1. கிளி - கிளிகள்
2. பழம் - பழங்கள்
3. கை - கைகள்

**ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.**


**1. பாடலில் உள்ள நிறங்களைக் குறிப்பிடுக.**

பாடலில் உள்ள நிறங்கள் **பச்சை மற்றும் மஞ்சள்** ஆகும்.

**2. "பச்சைக் கிளியே" என்ற பாடலின் ஆசிரியர் யார்?**

"பச்சைக் கிளியே" என்ற பாடலின் ஆசிரியர் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** ஆவார்.

**எ) கீழ்க்காணும் மெய் எழுத்துக்களை இணைத்து படத்திற்கு வண்ணமிடுக.**




## இரட்டைச் சொல்


**அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

**கடகடவென , மடமடவென , திடுதிடுவென்று , படபடவென**
**சலசலவென , சடசடவென , கலகலவென , சடசடவென ,**
**பளபளவென**

1. மாடு ____________________ ஓடியது.



2. இரயில் ____________________ ஓடியது.



3. கடுகு ____________________ வெடித்தது.
4. கிளைகள் ____________________ முறிந்தன.
5. ஓடையில் ____________________ ஓடியது.



6. பயிர்கள் ____________________ வளர்ந்தன.
7. குழந்தை ____________________ சிரித்தது.
8. மழை ____________________பெய்தது.



9. கண்ணாடி ____________________ மின்னியது.





# உலக நீதி

## மனப்பாடப் பகுதி

**அ) கீழ்காணும் அருஞ்சொற்களை சொல்லிக்கொண்டே எழுதுக.**

1. குறை
2. தீமை
3. உதவி
4. அம்மா
5. மற்றவர்
6. படிக்காமல்
7. பயப்படாமல்
8. தீய செயல்கள்

**ஆ) பொருள் தருக.**

1. ஓதாமல் - படிக்காமல்
2. பொல்லாங்கு - தீமை
3. மாதா - அம்மா
4. புறஞ்சொல்லி - குறை கூறி
5. அஞ்சாமல் - பயப்படாமல்
6. அடுத்தவர் - மற்றவர்
7. செய்தநன்றி - செய்த உதவி
8. வஞ்சனை - தீய செயல்கள்



**இ) எதிர்ச்சொல் தருக.**

1. குறை x நிறை
2. தீமை x நன்மை
3. வேண்டாம் x வேண்டும்

ஈ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. யாரை மறக்கக் கூடாது?

   அம்மாவை மறக்கக் கூடாது.

2. யாரோடு இணங்கக் கூடாது?

   தீய செயல்கள் செய்வாரோடு இணங்கக் கூடாது.

3. எப்படி இருக்கக் கூடாது?

   படிக்காமல் இருக்கக் கூடாது.

உ) "உலக நீதி" பாடலை சொல்லிக் கொண்டே எழுதுக.

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்;

2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்;

3. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்;

4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்;

5. போகாத இடந்தனிலே போக வேண்டாம்;

6. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்;

7. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்;


8. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்;

9. செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்;


# அடுக்குத் தொடர்


**குதித்துக் குதித்து , மடித்து மடித்து , துரத்தித் துரத்தி , ஓடி ஓடி தாவித் தாவி , அடுக்கி அடுக்கி , சுருட்டிச் சுருட்டி , பார்த்துப் பார்த்து , சிரித்துச் சிரித்து , கேட்டுக் கேட்டு , படித்துப் படித்து**

1. பூனை எலியைத் ____________________ பிடித்தது.
2. குழந்தைகள் ____________________ விளையாடினார்.
3. தவளை ____________________ சென்றது.
4. குரங்கு ____________________ குதித்தது.



5. அம்மா துணிகளை ____________________ வைத்தாள்.
6. சேகர் புத்தகங்களை ____________________ வைத்தான்.
7. நான் கதையைப் ____________________ மகிழ்ந்தேன்.
8. லதா பாடலைக் ____________________ பாடினாள்.
9. நேருஜி குழந்தைகளிடம் ____________________ பேசுவார்.
10. ராமு ஓவியத்தைப் ____________________ மகிழ்ந்தான்.
11. மணி பாய்களைச் ____________________ வைத்தான்.











# தெரிந்து கொள்ளுங்கள் - 1

**அ) கவனமாகப் படித்து, தலைப்பு எழுதுக.**



______________________________

பசு வீட்டு விலங்கு. பசு நமக்குப் பால் தரும். இது புல், தவிடு, புண்ணாக்கு இவற்றைத் தின்னும். பசுவின் பால் உடலுக்கு வலிமை தரும். பசுவின் சாணம் எருவாகப் பயன்படுகிறது. பசுவை நாம் அன்பாக வளர்க்க வேண்டும்.



**ஆ) கேள்விகளுக்கு பதில் எழுதுக.**

1. **பசு நமக்கு என்ன தரும்?**

   ______________________________

2. **பசு எவற்றைத் தின்னும்?**

   ______________________________

3. **பசுவின் பால் உடலுக்கு என்ன தரும்?**

   ______________________________

4. **எருவாகப் பயன்படுவது எது?**


   ______________________________

5. **நீ பசுவை பார்த்திருக்கிறாயா?**

   ______________________________

## தெரிந்து கொள்ளுங்கள் - 2


**அ) கவனமாகப் படித்து, தலைப்பு எழுதுக.**



______________________________

மீன் தண்ணீரில் வாழும் பிராணி. மீன்களில் பெரியவை, சிறியவை எனப் பலவகை உண்டு. மிகப் பெரிய மீன்கள் கடலில் வாழும். சிறிய மீன்களைத் தொட்டிகளில் வளர்க்கலாம். மீன்கள் பல நிறங்களில் உள்ளன. மீன் மிகவும் சத்துள்ள உணவு. நாம் மீனைச் சாப்பிடலாம்.





**ஆ) கேள்விகளுக்கு பதில் எழுதுக.**

1. **மீன் எங்கு வாழும்?**

   ______________________________

2. **பெரிய மீன்கள் எங்கே வாழும்?**

   ______________________________

3. **சிறிய மீன்களை எதில் வளர்க்கலாம்?**

   ______________________________

4. **மீன்களை வீட்டில் வளர்க்கலாமா?**

   ______________________________

5. **மீன்களைச் சாப்பிடலாமா? ஏன்?**

   ______________________________

   ______________________________